Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 1st of Every month    Date of Posting : 5th & 6th of Every month
Regd. No. TN / CC (S) DN / 119/ 15-17    Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)WPP-608/15-17





Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

NO FAME NO SELF INTEREST ONLY GOD NO NAME

ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.15/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ180/-

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிக்கை





Delivered by India Post    www.indiapost.gov.in



மலேசியா மற்றும் சிங்கப்பூர் நாமத்வார்களில்
பாகவதோத்தமர்களால் ஸ்ரீப்ரேமிக வரதனுக்கு ராதா கல்யாணம்





ஆகஸ்டு 15 - மஹாரண்யம் மற்றும் வெள்ளரை அரசு பள்ளிகளில்
G.O.D. இந்தியா டிரஸ்ட் மற்றும் தூத்துக்குடி சக்தி ஸ்ரீனிவாசன்
அறக்கட்டளை சார்பாக சிறப்பாக தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு
சீருடையும், பரிசுகளும், ஆசிரியர்களுக்கு விருதுகளும் வழங்கப்பட்டது.




August 10 - Singapore - Purpose of anger workshop
Ramanujamji

August 22 - Indonesia Bandung Kewalram
- Positive Leadership - Ramanujamji





August 19 - Indonesia Jakarta SP
- Transformational Leadership - Ramanujamji



குருபூர்ணிமா வைபவம் ஜூலை 29-31 பெங்களூரு
ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவில் வளாகம்



ஸ்ரீவேத வியாச புராண பாடசாலை அத்யாபகர்
ப்ரும்மஸ்ரீ கார்த்திகேய சர்மா - ஸ்ரீஸ்வாமிஜீ அவர்களின் அனுக்ரஹம்



பாடசாலை வித்யார்த்திகள்
ஸ்ரீஸ்வாமிஜீ அவர்களின் முன் பாராயணம்

























## ஆகஸ்டு 1,2 G.O.D. இந்தியா டிரஸ்ட் சார்பாக புராநவா, சம்ஸ்க்ருதி நிகழ்ச்சிகள்

விவரங்களுக்கு செய்தி ப. 32







ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 21 செப்டம்பர் 2015 கானம்: 2

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

**இந்த இதழில் ...**


| | |
|---|---|
| மதுரமான மஹனீயர்-234 | 05 |
| ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 08 |
| பாகவத பழம்- ஸ்க 2/28 | 09 |
| ஜன்மாஷ்டமி | 13 |
| ஞானிகளின் மஹிமை | 15 |
| வீடு தேடி வருவான் விட்டலன் | 24 |
| சனாதன கோஸ்வாமி | 26 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 29 |
| ப்ருந்தாவன கண்ணன் | 33 |
| மாலே மணிவண்ணா | 35 |


பரமர்ம கட்டநாதௌள கலஸ்ய யத் கௌஸலம்
ந தத் ஸாதோ:
சித்ரம் கரோதி ஸூசி ததா பிதத்தே
ஸதா தந்து:

பிறர் தோஷத்தை பிளப்பதில், துஷ்டருக்கு என்ன சாமர்த்தியமோ அது சாதுவுக்கு இல்லை.

பாருங்கள்; ஊசி ஓட்டை செய்கிறது. நூல் எப்போதும் ஓட்டையை அடைக்கிறது.

## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

ராகம் : மத்யமாவதி

பல்லவி

மாதுரீஸகீ மஹாராக்ஞி
மஹாரண்ய - மதுரபுரிவாஸினி

(மாதுரீஸகீ)

அனுபல்லவி

பத்மவாஸினி - பத்மலோசனி
பத்மநாப - ஹ்ருதய - உல்லாசினி

(மாதுரீஸகீ)

சரணம்

ஸுந்தர ஸுகவர தாரிணீ
ஸுந்தர கோகில த்வனி ப்ரதாயினீ
ஸுந்தராபரண பரிஷ்கார பூஷணி
ஸுந்தர ப்ரேமிக வரத ஹ்ருதய நிவாஸினீ

(மாதுரீஸகீ)

முன் அட்டை: கோவிந்தபுரம் யோகிராம்சுரத்குமார் நாமாஸ்ரமம் பிரதிஷ்டா தினம்

பின் அட்டை - ஆகஸ்டு 15, ப்ரேமிக பவனத்தில் சுதந்திர தினத்தன்று



# மதுரமான மஹநீயர் - 234

-டாக்டர். ஆ.பாக்யநாதன்

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுடன், எப்பொழுதும் இருந்து வருவதே ஒரு சுகமான அனுபவம். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அடிக்கடி சொல்வது, 'என்றைக்கோ வாழ்ந்த பக்தர்களுடைய சரித்ரத்தை படிப்பது என்பது வேறு. அத்தகைய பக்தர்களுடன் வாழ்வது என்பது வேறு'. சந்த் துக்காராம், சந்த் கோரகும்பர், பத்ராசலம் ராமதாசர் போன்ற மஹாபக்தர்களுடைய சரித்ரத்தில் அவர்களுடைய நிலைக்கு, அவர்களுடைய மனைவிகளால் கூட ஈடு கொடுக்க முடியவில்லை. யோகிராம்சுரத்குமாரிடம் ஒரு பக்தர், தான் எப்பொழுதுமே அவருடன் இருக்க விரும்புவதாக தெரிவித்தார். யோகிராம்சுரத்குமார் அதற்கு, தன்னுடன் இருக்கும் சில நேரங்கள் சுவர்க்கம் போலவும், சில நேரங்கள் நரகம் போலவும் இருக்கும் என்றும், அதற்கு தயாராக இருப்பவர்கள் மட்டுமே, மஹான்களுடன் எப்பொழுதும் இருக்க முடியும் என்பதை, **'Hell or Heaven you be with me'** என்றார்.

மஹான்களுடைய மனதானது உன்னத நிலையில் இருப்பதால், அவருடன் வாழ்க்கை முழுவதும் உடன் இருப்பவர்களால் கூட, புரிந்து கொள்ள முடியாது. ஒருநாள் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், பாகவதம் பாராயணம் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது அருகில் இருந்த என்னிடம், "கலியில் வர கூடியவர்களின் தகுதியின்மையை மனதில் கொண்டு, வேதத்தை நான்காக பிரித்து, அதை காப்பாற்றும் பொறுப்பை ஒவ்வொரு ரிஷியிடம், வேத வியாசர் கொடுத்தார் என்று வருகின்றது. அதேபோல், இதிகாச புராணங்களை காப்பாற்றும் பொறுப்பை, சூதருடைய தந்தை ரோமஹர்ஷணரிடம் கொடுத்தார் என்று வருகின்றது".

"அப்படியிருக்க, நைமிசாரண்யத்தில் சௌனகாதி

மஹரிஷிகள், சூதரை கலிக்கு என்ன உபாயம் என்று கேட்கும்பொழுது, 'என் தந்தையிடமிருந்து கற்ற ஸ்ரீமத் பாகவதம் இருக்கின்றது' என்றல்லவா சொல்லி இருக்க வேண்டும். சூதர் அப்படி சொல்லாமல், 'சுகர், பரீக்ஷித்திற்கு சொன்ன, ஸ்ரீமத் பாகவதம் என்ற வேத துல்யமான புராணம் உள்ளது' என்றுதான் ஆரம்பிக்கின்றார். அப்படியானால், சூதர் ரோமஹர்ஷணரிடமிருந்து ஸ்ரீமத் பாகவதத்தை தெரிந்து கொள்ளவில்லை என்று வருகின்றது. ஏன்? எல்லா இதிஹாச புராணங்களையும் ரக்ஷிக்கும் பொறுப்பை ரோமஹர்ஷணரிடம் கொடுத்தாலும், ஸ்ரீமத்பாகவதத்தை கொடுக்கவில்லை என்று தெரிகின்றது. ஒரு அப்பா, எல்லா மந்திரங்களையும் மற்றவர்களுக்கு உபதேசித்து விடுவார். மிகவும் ரகஸ்யமான முக்யமான மந்திரத்தை, தன்னுடைய மகனுக்கு உபதேசம் செய்வது போல், வ்யாச பகவான், தான் எழுதிய பாகவதத்தை, கர்ப்பத்திலேயே ஜீவன்முக்தரான தன்னுடைய பிள்ளையான சுகருக்கு, பொறுமையுடன் ஒவ்வொரு சுலோகமாக சொல்லி வைத்தார் என்று தெரிகின்றது. ஸ்ரீமத் பாகவதம், ஜீவன் முக்தியை கொடுக்கக்கூடிய நூல். மோக்ஷத்தில் ஆசை உடையவர்களால் சேவிக்க கூடியது".

மேலும் தொடர்ந்தார். "பகவானிடம் நமக்கு என்ன பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று தெரியாது. அப்படியே பிரார்த்தனை செய்தாலும், ஏதாவது அல்பமாகத்தான் பிரார்த்தனை செய்து விடுவோம். நாம் அல்பமாக பிரார்த்தனை செய்தால் கூட, பகவான் பெரிய மனது உடையவராக இருப்பதால், பெரியதாகத்தான் அனுக்ரஹம் செய்வான். உத்தரை தன்னுடைய கர்ப்பத்தில் உள்ள பரீக்ஷித்தை, அஸ்வத்தாமாவின் பிரும்மாஸ்திரம் தாக்க வரும்பொழுது, பகவான் கோபாலனை சரணாகதி செய்து, 'இந்த மரணத்திலிருந்து என் குழந்தையை காப்பாற்று' என்கின்றாள். பகவான் என்ன நினைக்கின்றான்? 'எப்பொழுது உத்தரை இப்படி வேண்டி, தன்னை சரணாகதி அடைந்தாளோ, அந்த குழந்தைக்கு இனி எப்பொழுதுமே மரணம் வர கூடாது' என நினைத்தான். அதனால், அப்பொழுது தன்னுடைய சக்ராயுதத்தினால் காப்பாற்றியது மட்டும் அன்றி, பிற்காலத்தில் ஸ்ரீசுகர் வாயிலாக பாகவதம்

கேட்க வைத்து, அவனுக்கு முக்தியையும் கிடைக்க செய்தார். இனி அவன் பிறந்தால் அல்லவோ இறப்பதற்கு? ஆகவே, யார் ஒருவருக்கு ஸ்ரீமத் பாகவதம் கிடைக்கின்றதோ, அவர்களுக்கு பகவான் கோபாலன் கடாக்ஷம் செய்துள்ளான். அதனால்தான் பாகவதம் கிடைத்துள்ளது" என்றார். பகவானுடைய பாதத்திலிருந்து கங்கை வந்தது. பகவானுடைய பாதத்தை ஹிருதயத்தில் தியானம் செய்யும் பாகவதர்களின் கண்களிலும், ஆனந்த கண்ணீர் பெருகுகின்றது. அதனால்தான், அத்தகைய பாகவதர்களின் பாத தீர்த்தமே, கங்கை நீருக்கு சமம் என்பதும் சரிதானே!

இப்படி, அன்றைய தினம் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், ஸ்ரீமத் பாகவதம் குறித்த தனது ரஸமான பாவங்களை வெளிப்படுத்தினார்கள். மற்றொரு சமயம், நான் ஸ்ரீஸ்வாமிஜியுடன் ஒரு கோயிலுக்கு சென்றிருந்தேன். பூஜை செய்பவர், மணியை எங்கோ வைத்து விட்டார். பூஜைக்கு நேரமாகி விட்டது. 'மணி எங்கே? மணி எங்கே?' என்று சத்தம் போட்டு, பக்கத்தில் இருப்பவர்களை எல்லாம் விரட்டி கொண்டே இருந்தார். ஸ்ரீஸ்வாமிஜி சிரித்து கொண்டே, "இவர்தான் உண்மையை ஒத்து கொண்டுள்ளார். ஏன் என்றால் நாம் எல்லோரும் இன்று, பூஜையோ பஜனையோ எல்லா தெய்வீக காரியங்களையும் money (பணம்) ஆகத்தானே செய்து கொண்டு இருக்கின்றோம்" என்றார். அப்பொழுது பூஜை முடிந்து கற்பூரம் காட்டும்பொழுது, பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஒருவர் தன் குடும்பத்தாரிடம், "செருப்பை எங்கே விட்டு வந்தீர்கள். ஜாக்ரதையாக விட்டு விட்டு வந்திருக்கின்றீர்களா?" என்று கவலையுடன் கேட்டு கொண்டிருந்தார். ஸ்ரீஸ்வாமிஜி சிரித்து கொண்டு, என்னை பார்த்து, "நாம் குருநாதருடைய பாதுகைகளை தியானம் செய்வது போல், அவர் அவருடைய பாதுகைகளை தியானம் செய்கின்றார்" என்றார். இப்படி சொல்லிக்கொண்டே போகலாம்.

**காலை 7.20 - 7.30AM ஒவ்வொரு சனிக்கிழமையும் *பொதிகை* தொலைக்காட்சியில் "*மதுரகீதம்*" - ஸ்ரீஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனங்களை ஸ்ரீஅஸ்வின்குமார் பாடும் நிகழ்ச்சி ஒளிபரப்பாகிறது.**



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: ஞான மார்க்கம் என்பதில், ஒருவன் தன்னுடைய அறிவை விசாரம் செய்து செய்து, தூண்டி கொண்டே இருக்க வேண்டும் அல்லவா?

பதில்: உண்மைதான். அறிவு என்பது ஒரு கத்தியை போன்றது. அதி கூர்மையாக, ஒருவர் தீட்டி கொண்டே இருக்கின்றார். அவர் விளையாட்டுத்தனம் உடையவராகவும், கவனமாக இல்லாதவராகவும் இருந்தால், அந்த கத்தியால் தன்னையே குத்திக்கொண்டு, விபரீதத்தை ஏற்படுத்தி கொண்டு விடுவார். அதுபோல், சாஸ்திரங்களும் மஹான்களும் காட்டிய வழியில், அறிவு தூண்டப்பட வேண்டுமே தவிர, தனக்கு தோன்றிய வழியில் எல்லாம் தூண்டினால், அது குதர்க்கமாகவும் பைத்தியத்திலும் கொண்டு போய் விட்டு விடும்.

கேள்வி: அர்ச்சாவதாரத்தில் உள்ள பெருமாளை வழிபாடு செய்வதால் என்ன பலன்?

பதில்: பார்த்தசாரதி ஆலயத்திற்கு செல்கின்றோம். இன்று ஏகாதசி, சனிக்கிழமை, சிரவணம் என்று நினைத்து சென்று, அவரை அர்ச்சாவதாரம் என்று மட்டும் நினைத்து சேவித்து, தீர்த்தம், துளசி பிரசாதம் வாங்கி வந்தால், புண்யம் வரும். அவர் சைதன்யத்துடன், உயிருடன் அங்கு நிற்கின்றார்; நம்மை பார்க்கின்றார். நாம் சொல்வதை எல்லாம் கேட்கின்றார் என்று நம்பிக்கையுடன் நினைத்து சேவிக்கின்றவனுக்கு, அவனுடைய பிரார்த்தனைகள் எல்லாம் சீக்கிரத்தில் நிறைவேறும்.

அவர் சர்வக்ஞன்; சர்வசக்தன்; சர்வ அந்தர்யாமி; சர்வ கல்யாண குணங்கள் உடையவன்; சரணாகத வத்ஸலன் என்று நினைத்து சேவிப்பவனுக்கு, ஞானம் சித்திக்கும்.



# பாகவத பழம்

**ஸ்கந்தம் 2, அத்யாயம் 9**

–ஸ்ரீ ஸ்வாமிஜி (28)

எந்த சரணங்கள் ஞானத்தின் எல்லையில் அடையப்படுகிறதோ, அந்த சரணத்தை பிரம்மா தரிசனத்தினால் உண்டான சந்தோஷம் நிறைந்த மனதையுடயவராய், மயிர்கூச்சல் உடைய சரீரத்தோடும், ஆனந்தக் கண்ணீரோடும் வணங்கினார்.

*தம ப்ரீயமாணம் ஸமுபஸ்திதம் ததா ப்ரஜா*

*விஸர்கே நிஜசாஸநார்ஹணம்*

*பபாஷ ஈஷத் ஸ்மித சோசிஷா கிரா பரிய:*

*ப்ரியம் ப்ரீதமநா: கரே ஸ்ப்ருசன்* 2:9:18

அப்பொழுது பகவான், அவரது கையைப் பற்றி புன்முறுவலோடு அவரிடம் பேசத் தொடங்கினார்.

"ஹே வேதகர்ப! சரியான வழியில் யோகம் செய்யாத மற்றும் துர்நடத்தையுள்ள யோகிகளுக்கு, துர்லபமாக இருக்கும் நான் உனது தவத்தால் மகிழ்ந்தேன். சிருஷ்டி செய்ய விரும்பி, நீ செய்த தவத்தால், நான் சந்தோஷம் அடைந்தேன். வரங்களுக்கு ஈசனான என்னிடத்தில், இஷ்டமான வரத்தை பெற்றுக் கொள்! மனிதனுக்கு, எனது தரிசனத்தினாலேயே சிரேயஸை அடைய வேண்டியதிலுள்ள சிரமம் நீங்குகிறது".

"ரஹஸ்யமாக தப தப என்று நான் கூறிய வாக்கைக் கேட்டு நீர் மிகவும் உயர்ந்த தவத்தை செய்தீர். அதுவும் கூட என் அனுக்ரஹம்தான். என்னுடைய இந்த உலகத்தைப் பார்ப்பதும், என்னுடைய அனுக்ரஹம்தான்".

"குற்றமற்ற பிரம்மதேவரே! சிருஷ்டியின் ஆதியில் நீ செய்ய வேண்டியது என்னாலேயே உபதேசிக்கப்பட்டது. தவம்தான் எனது ஹ்ருதயம். நான்தான் தவத்தின் உண்மையான ஸ்வரூபம்".

*ஸ்ருஜாமி தபஸைவேதம் க்ரஸாமி தபஸா புன:*

*பிபர்மி தபஸா விஸ்வம் வீர்யம் மே துஸ்சரம் தப: 2:9:23*

"இந்த பிரபஞ்சத்தை தவத்தினால் சிருஷ்டிக்கின்றேன்; தவத்தினால் காப்பாற்றுகின்றேன்; தவத்தினால் அழிக்கின்றேன்; மற்றவர்களால் அனுஷ்டிக்கவே முடியாத தவம்தான் எனது சக்தி".

இவ்வாறு பகவான் கூறியதைக் கேட்ட பிரம்மதேவர், "ஹே பகவன்! எல்லா பிராணிகளிலும், தாங்கள் அந்தர்யாமியாக இருக்கிறீர்கள். அந்த ஞானத்தினாலேயே, எவ்வித தடங்கலுமின்றி நான் செய்ய விரும்புவதை அறிகிறீர்கள் அல்லவா? ஆயினும், ஹே நாத! ரூபமில்லாதவரான தங்களுடைய ஸ்தூல, ஸூக்ஷ்ம ரூபங்களை எவ்விதம் நான் அறிவேன்? அதை அறிய விரும்புகின்ற என்னுடைய விருப்பத்தை நிறைவேற்றுவீராக".

"ஹே மாதவ! வீண்போகாத சங்கல்பத்தைக் கொண்டு, தாங்கள் ஒரு சிலந்தியை போல் எப்படி, இந்த ஜகத் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களை செய்கின்றீர்களோ, அவ்விதமே அந்த அறிவை எனக்கு அருள வேண்டும். நீங்கள் எனக்கு ஆணையிடுவதை சோம்பல் இல்லாமல் செய்வேன்".

"உங்களது அனுக்ரஹத்தால் பிரஜைகளின் சிருஷ்டியை செய்யும் நான், அஹங்காராதிகளில் பந்தமடைய மாட்டேன்' என்று பிரார்த்தித்தார். பிரம்மதேவர் இவ்வாறு பிரார்த்தித்ததும், பகவான் ஏழு ஸ்லோகங்களில் விடையளிக்கின்றார். அவற்றில் முக்கியமான நான்கை சது:ஸ்லோகி பாகவதம் என்று கூறுவர். இதுவே ஆதி பாகவதம்; அதாவது முதலில் உபதேசிக்கப்பட்ட பாகவதம்.

*அஹமேவாஸமேவாக்ரே நாந்யத் யத் ஸதஸத்பரம்*

*பஸ்சாதஹம் யதேதச்ச யோSவசிஷ்யேத ஸோSஸ்ம்யஹம் 2:9:32*

*ருதேSர்தம் யத் ப்ரதீயேத ந ப்ரதீயேத சாத்மனி*

*தத் வித்யாதாத்மநோ மாயாம் யதா (ஆ)பாஸோ யதா தம: 2:9:33*

*யதா மஹாந்தி பூதானி பூதேஷூச்சாவசேஷ்வநு*

*ப்ரவிஷ்டான்யப்ரவிஷ்டாநி ததா தேஷு ந தேஷ்வஹம் 2:9:34*

*ஏதாவதேவ ஜிஜ்ஞாஸ்யம் தத்வஜிஜ்ஞாஸுநா(ஆ)த்மன:*

*அன்வயவ்யதிரேகாப்யாம் யத் ஸ்யாத் ஸர்வத்ர ஸர்வதா 2:9:35*

“பரம ரஹஸ்யமானதும், அனுபவத்துடன் கூடினதுமான அந்த ஞானத்தையும், அதன் ஸாதனத்தையும் நான் உனக்கு உபதேசிக்கின்றேன். எனது உண்மையான ஸ்வரூபத்தைக் குறித்த ஞானம் உனக்கு எனது அருளால் உண்டாகட்டும்”.

“சிருஷ்டிக்கு முன் நான் மட்டுமே இருந்தேன். ஸ்தூல - ஸூக்ஷ்மம் என்று எதுவுமே இருக்கவில்லை. அவைகளுக்கு காரணமானதும் அப்பொழுது இல்லை. அப்பொழுது நான் மட்டுமே இருந்தேன், வேறொன்றும் இல்லை. சிருஷ்டிக்குப் பிறகு இருக்கும் பிரபஞ்சமும் நான்தான். பிரளயத்தின் பின், எது எஞ்சியிருக்குமோ, அதுவும் நான்தான்”.

“ஒரு வஸ்து உண்மையில் இல்லாதபோதிலும், அதன் அதிஷ்டானத்தில் இருப்பதுபோல் தோன்றுவதும், வாஸ்தவத்தில் இருக்கும் வஸ்து தெரியாமல் இருப்பதும், எல்லாமே எனது மாயைதான். இல்லாத இரண்டு சந்திரன் தெரிவதும், இருக்கும் ராகு தெரியாமலிருப்பதும் எனது மாயைதான்”.

“ஆகாசம் முதலிய மஹாபூதங்களுக்கு, எல்லா பௌதிக பதார்த்தங்களிலும் பிரவேசம் உண்டு என்று சொல்லமுடியும். அதே சமயம், அவைகளே எல்லா பதார்த்தங்களுக்கும் உபாதான காரணமாக இருப்பதால், (ஏற்கனவே அவைகளில் இருப்பதால்) பிரவேசம் இல்லை என்றும் சொல்ல முடியும்”.

“அதேபோல், நானும் எல்லாவற்றிலும் (அவைகளின் அந்தர்யாமியாக) நுழைந்திருக்கின்றேன் என்றும் சொல்லமுடியும், நுழையவில்லை என்றும் சொல்ல முடியும்”. (ஏனெனில், பரமாத்மாவைத் தவிர இரண்டாவதாக வேறு வஸ்துவே இல்லாததால்).

“பஞ்சபூதங்களால் ஆன வஸ்துக்களின் தன்மை, அதிலிருக்கும் பஞ்ச பூதங்களின் தனித்தன்மையை எவ்விதம் பாதிப்பதில்லையோ, அதேபோல், இந்த பிரபஞ்சத்தின் உள் நுழைந்தபோதிலும், நான் அதனால் பாதிக்கப்படாமல், தனித்த பொருளாகவே இருக்கிறேன். எந்த பொருள், தான், எவ்வித மாற்றத்தையும் அடையாமல், காரியங்களில் காரணமாக

அனுவர்த்திக்கின்றதோ(அன்வயம்), காரணமாக இருக்கும்போது காரியத்தைக் காட்டிலும் வேறாக இருக்கின்றதோ, மற்றும் காரியங்கள் அனைத்தும் அழிந்த நிலையிலும், மிஞ்சி இருக்கின்றதோ (வ்யதிரேகம்), உண்மை தத்துவத்தை அறிய விரும்பும் ஒருவன் எல்லா இடத்திலும், எப்பொழுதும் இருக்கும் அந்த பரம் பொருளான ஆத்மாவை அறிய வேண்டும்".

"நான் கூறிய இந்த மதத்தில் சித்த ஏகாக்ரஹத்துடன் மனதை நிறுத்துங்கள். அப்படிச் செய்வதால், கல்ப காலங்களுக்கும் செய்யப் போகும் சிருஷ்டியில், தாங்கள், "நான் தான் செய்கிறேன்" என்ற மோஹத்தை ஒருபொழுதும் அடையமாட்டீர்" என்று பகவான் உபதேசித்தார். இவ்வாறு கூறி ஸ்ரீஹரி மறைந்துவிட்டார்.

அஞ்சலி செய்தபடியே பார்த்துக்கொண்டிருந்த பிரம்மா, பின் இந்த உலகத்தை முன்போலவே சிருஷ்டித்தார்.

இந்த ஸ்ரீஹரியின் மாயையை அறிய விரும்பிய, பரம பக்தரான நாரதர், தனது நன்னடத்தையாலும், ஒழுக்கத்தாலும், வணக்கத்தாலும் பிரம்மாவை சந்தோஷப்படுத்தினார்.

பிரம்மதேவரான தனது தந்தையை அனுஸரிக்கும் அவர், அவருக்குத் தொண்டு செய்து, அவருக்கு மிகவும் பிரியமானவரும் ஆனார்.

பரீக்ஷித்!, "நாரதர் தனது சந்தோஷமடைந்த தந்தையான பிரம்மாவிடம், நீ என்னிடம் கேட்ட கேள்விகளையே கேட்டார்" என்றார் சுகர்.

"அப்பொழுது பிரம்மா, பகவானால் தனக்கு உபதேசிக்கப்பட்ட இந்த பத்து லக்ஷணங்களையுடைய பாகவதத்தை, நாரதருக்கு உபதேசித்தார். நீ என்னிடம் கேட்ட எல்லா கேள்விகளுக்கும், அதற்கும் மேலுள்ளவற்றிற்கும் முழுவதுமாக, பதில் அதில் இருப்பதால், அதை உனக்கு இப்பொழுது சொல்லப் போகின்றேன்" என்றார் சுகர்.

(கனியும்)

# ஜன்மாஷ்டமி

- ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்

ஸ்ரீகிருஷ்ண பகவான் கீதையில் ''உலகம் முழுவதும் தூங்கிக்கொண்டிருக்கின்ற காலத்தில் ஞானி விழித்து கொண்டிருக்கின்றான்'' என்கிறார். எங்கும் இருட்டாக இருக்கும் காலத்தில், ஒரு வெளிச்சம் தோன்றினால், அதை வரவேற்கிறோம். ஒரு பாலைவனத்தின் நடுவில், கொஞ்சம் நிழலும் நீரும் தென்பட்டால், அளவில்லா ஆனந்தத்தை தருகிறது. இருண்ட மேகங்களின் மத்தியில் தோன்றும் மின்னல் அதிக பிரகாசத்துடன் விளங்குகின்றது. ஸ்ரீகிருஷ்ணன் பிறந்த தினம் ஜன்மாஷ்டமி எனப்படுகின்றது. ஸ்ரீகிருஷ்ணன் தக்ஷிணாயனத்தில், ஆவணியில் கிருஷ்ண பக்ஷத்தில் அஷ்டமியன்று நடுநிசியில் பிறந்தான். நமக்கு ஒரு வருஷம் தேவர்களுக்கு ஒருநாள்; உத்தராயணம் அவர்களுக்கு பகல்; தக்ஷிணாயணம் அவர்களுக்கு இரவு. ஆகையால் கிருஷ்ணன் அவதரித்த காலம், தேவர்களுக்கு இரவாகும். அதிலும் இந்த மாதம் நிசியாகும். இம்மாதிரியே, நமக்கு ஒரு மாதம் பித்ருக்களுக்கு ஒரு நாளாகும். சுக்ல பக்ஷம் அவர்களுக்கு பகல். கிருஷ்ண பக்ஷம் அவர்களுக்கு இரவு. ஆகையால் கிருஷ்ணன் அவதரித்த காலம், அவர்களுக்கும் இரவாகிறது. அஷ்டமி பக்ஷத்தின் நடுவில் வருவதினால், அதுவும் பித்ருக்களுக்கு நடுநிசியாகும். ஸ்ரீகிருஷ்ணன் பிறந்தது அஷ்டமியன்று நடுநிசி. இதனால் என்ன ஏற்படுகின்றது? ஸ்ரீகிருஷ்ணன் அவதரித்த காலம் தேவர்கள், பித்ருக்கள், மனிதர்கள் எல்லோருக்கும் நடுநிசி. இருட்டு அதிகமாக இருக்கும் சமயம்.

ஸ்ரீகிருஷ்ணன் பிறந்ததும் இருள் நிறைந்த சிறைச்சாலையில், இப்படி கிருஷ்ணாவதார காலத்தில் எல்லாம் இருள்மயமான சூழ்நிலை. அவனுடைய பெயரும் கிருஷ்ணன். மேனியும் கருப்பு. நாமரூபம் இரண்டும் கருப்பு. ஸ்வரூபம் மாத்திரம் பிரகாசம். இவ்வளவு ஒரே கருப்பு மயத்தில் ஆவிர்ப்பவித்த ஞான ஒளியானதால், மங்காத

பிரகாசமுடையதாக இன்றும் என்றும் ஜ்வலித்து கொண்டிருக்கின்றது. அஞ்ஞானத்தினால் இருண்டு கொண்டிருக்கும் உலகத்தில்தான், ஞானத்தின் மகிமை விளங்கும். அவனுடைய கீதை, உலகெங்கும் ஒலித்து கொண்டிருக்கின்றது. அவன் நிறைந்திருக்கும் ஸ்ரீபாகவத புராணம், புராண சிரேஷ்டமாக விளங்குகிறது. உடலில் இருக்கும் உயிருக்கு ஒளி அளிப்பது கண். உலகத்துக்கே ஒளி அளிப்பவன் கண்ணன். நம் தென்னாட்டில், அவன் கிருஷ்ணன் மாத்திரமில்லாமல், கண்ணனாகவும் ஆகி விட்டான். உள்ளக்கண்ணையும் வெளிக்கண்ணையும் அமிருதத்தில் மூழ்க வைத்து, காதின் வழியாகவும் கீதா அம்ருதத்தை உட்செலுத்தி, குளிரவைக்கும் கண்ணனே நம் உலகுக்கு கண்; கருப்பினிடையே விளங்கும் ஒளி.

ஸ்ரீகிருஷ்ணன், ஒரே அவதாரத்தில், அநேகவிதமான லீலைகளை செய்து நடித்திருக்கிறான். மிகவும் சேஷ்டை செய்யும் குழந்தை, பிறகு மாடு மேய்க்கும் பையன், குழலூதும் ரசிகன், மல்யுத்தத்தில் கைதேர்ந்தவன், காளைமாடுகளை அடக்கியவன், ராஜ்யதந்திர நிபுணன், தூது சென்றவன், சாரதி, திரௌபதி குசேலர் போன்ற அநாதர்களை ரக்ஷித்தவன், பீஷ்மருக்கு முக்தி அளித்தவன், பீஷ்மருக்கு மட்டுமல்ல, தன்னை கொல்லும்படியான அம்பை பிரயோகித்த ஒரு வேடனுக்கும் முக்தி அளித்தவன், இப்படி எல்லாம் லீலை செய்திருக்கிறான். உலகில் நல்லதும் பொல்லாததுமாக அநேகவிதமான மனப்போக்குடையவையாக மனித உயிர்கள் அமைந்திருக்கின்றன. வீரனும் சூரனும், திருடனும் ஸ்திரீ லோலனும், பேதையும் உழைப்பாளியும், கிழவனும் குழந்தையும், இறுமாப்புடையவனும் பரோபகாரியும், மனமுருகியவனும் கல்நெஞ்சனும், கஞ்சனும் ஊதாரியும், மூடனும் கல்விமானும், யோகியும் ஞானியும் இப்படி பலவிதமான மனநிலை உடையவர்கள் உலகத்தில் அமைந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லோரையும் தன் பலவகை லீலைகளினால் தனித்தனியே ஆகர்ஷித்து, தன் கருணைக்கும் அதன் மூலம் ஞானத்துக்கும் பாத்திரமாக்கி, கடைத்தேற வைத்த ஸ்ரீகிருஷ்ணாவதாரமே பரிபூர்ணாவதாரம்.

# ஞானிகளின் மகிமை

- ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்

பாடல் பெற்ற க்ஷேத்திரங்கள் இருக்கின்றன. பெயர் பெற்ற க்ஷேத்திரங்கள் இருக்கின்றன. மற்றவற்றை விட இவற்றுக்கு என்ன விசேஷம்? காளஹஸ்தி, சிதம்பரம், திருவண்ணாமலை, காசி முதலிய க்ஷேத்திரங்களை விசேஷமுடையவை என்றெண்ணி, அங்கே போய் தரிசனம் செய்து வருகிறோம். மஹாமக தீர்த்தம், கங்கா தீர்த்தம் முதலியவற்றுக்கு அதிக மஹிமை இருக்கிறதென்கிறோம். இதற்கு காரணம் என்ன?

க்ஷேத்திரங்களும் தீர்த்தங்களும், ஞானிகளுடைய சம்பந்தத்தை பெற்று, விசேஷ மகிமையை அடைகின்றன. அவர்களுடைய பாதம் பட்டிருந்தால், அதற்கு ஒரு விசேஷம் ஏற்படுகிறது. ஈஸ்வரன் நேரே வந்ததை விட அதிகமானது ஞானிகளின் வரவு. ஈஸ்வரன் எப்படி ஆனந்தமுள்ளவனாக இருக்கிறானோ, அப்படியே ஞானிகளும் இருக்கிறார்கள். ஞானி ஈஸ்வரனே; அதிகமும் ஆவான். ஈஸ்வரனுக்காவது, ஜீவாத்மாக்கள் மீது கருணை புரிந்து காப்பாற்ற வேண்டுமென்ற ஊர்க்கவலை உண்டு; ஞானிக்கு அதுகூட இல்லை.

ப்ரத்யக்ஷ ஈஸ்வரன் ஞானி. அகஸ்திய தீர்த்தம், வசிஷ்ட தீர்த்தம் என்கிறோம். அகஸ்தியர், வசிஷ்டர் முதலியவர்களின் பாதங்கள் பட்ட விசேஷத்தினாலேயே, அவற்றுக்கு பெருமை உண்டாகி இருக்கின்றது. ஸ்ரீராமருடைய சம்பந்தத்தால் தனுஷ்கோடிக்கு பெருமை. சீதாதேவியினுடைய பாதமும் அங்கு பட்டிருக்கின்றது. வடதேசத்திலிருந்து வந்தவர்கள், தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வதோடல்லாமல், அங்கேயுள்ள மணலையும் வழிபடுகிறார்கள். கண்ணில் ஒத்தி கொள்கிறார்கள். ஸ்ரீராமர் முதலியவர்களின் பாதங்கள் பட்டதினால், அந்த இடம் பெருமை பெறுகிறது. உத்தமமான தவத்தை உடையவர்கள், பரமேஸ்வரனை பூஜை செய்து, தாங்கள் அனுக்ரஹம் பெற்றதோடு நிற்கவில்லை; இங்கே வழிபடும் எல்லோரும் அருள் பெற வேண்டுமென்று, வேண்டிக்கொண்டார்கள். உலகத்திலுள்ளவர்கள் சுலபமாக பகவானுடைய கிருபையை அடைய வேண்டுமென்ற கருணையால், அவர்கள் கூடி

பிரார்த்தித்தார்கள். அதனால் அந்த இடங்களில், ஈஸ்வர சான்னித்யம் அதிகமாக இருக்கின்றது.

க்ஷேத்திரங்களில் உத்ஸவங்கள் நடைபெறுகின்றன. அப்போதும் சாதாரணமாகவும் அன்னதானம் செய்கிறார்கள். சத்திரம் கட்டி வைத்தும், பலபேருக்கு அன்னம் அளிக்கிறார்கள். அப்படி சாப்பாடு போடுவது, எல்லோருடைய பசியையும் தீர்ப்பதற்காக மட்டும் இல்லை; அங்கே சாப்பிட்டு விட்டு போகும், ஆயிரம் பேர்களில் யாராவது ஒருவர், பிரம்ம வித்தாக (ஞானியாக) இருந்து, அவருடைய வயிற்றில் சிறிது அன்னம் விழுந்தால், அதனால் அளவில்லாத நன்மையும் சிரேயஸும் ஏற்படும். அந்த ஒருவரை உத்தேசித்து, ஆயிரக்கணக்கானவர்களுக்கு சாதம் போடுகிறார்கள்.

நாம் வாழ்வில் ஒருவரை மிக பெரியவராக நினைத்து கொண்டிருக்கிறோம். அவரை மிகவும் போற்றி ஒரு ஆதர்ச புருஷராக, மிகவும் புனிதராக, வழிகாட்டியாக நினைக்கிறோம். அவரையே தினம் வாழ்த்தி வணங்கி வருகிறோம் என வைத்து கொள்வோம். ஆனால் திடீர் என்று ஒருநாள், அவர் இதுநாள் வரை போட்டதெல்லாம் வெறும் வெளி வேஷம், நடிப்பு, போலித்தனம்; அவர் முழுவதும் ஒரு கபடர் என்று அறிந்தால், அதை நம்மால் தாங்கவே முடியாது அன்றோ! அந்த ஏமாற்றத்தில் இருந்து நம்மால் மீளவே முடியாது.

ஒரு சின்ன கிருஷ்ணனை ஒரு சிறிய சம்புடத்தில் வைத்து பூஜை செய்து கொண்டிருக்கிறோம். உருவில் அவன் மிக சிறிய குழந்தையே என நினைத்து, அவனுக்கு பார்த்து பார்த்து பிரியமுடன் செய்கிறோம். திடீரென அவன் ஒருநாள் தன் விஸ்வரூபத்தை காட்டினால், அப்போது இவ்வளவு பெரியவரா நம்ம குட்டி கிருஷ்ணன் என்று ஆனந்தத்திலும் வியப்பிலும் ஆழ்ந்த நாம், அதிலிருந்து மீளவே முடியாது அன்றோ?

-மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

## சனாதனப்புதிர் பகுதி 77- <u>கேள்விகள்</u> - ஆத்ரேயன்

1. தக்ஷப்ரஜாபதியை அழிக்க வந்த வீரபத்ரன் எப்படி தோன்றினான்?
2. சிவனது கேசத்தில் இருந்து தோன்றிய மற்றவர் யார்?
3. விஷ்ணுவின் சக்கரத்தை விழுங்கியது யார்?
4. விஷ்ணுவினுடைய சார்ங்கம் என்ற வில்லை உடைத்தது யார்?
5. மணிபத்ரன், சண்டன், நந்தி இவர்கள் என்ன செய்தார்கள்?
6. வீரபத்ரன் ப்ரும்மாவின் பிள்ளையான தக்ஷ ப்ரஜாபதியை எப்படி கொன்றான்?
7. சிவனை பற்றி எந்தெந்த புராணங்களில் காணப்படுகின்றது?
8. 50 கைகளுடன் கூடிய மஹாசதாசிவ மூர்த்தி எங்கு காணப்படுகிறது?
9. சம்பத்கரி, ஆயுஷ்கரி என்றால் என்ன?
10. வில்வ மரத்தடியில் ஒரு ப்ராம்மணனுக்கு உணவு அளிப்பதால் என்ன பலன்?


**Dr. Shriraam Mahadevan**

MD (Int Med), DM (Endocrinology)
Consultant in Endocrinology and Diabetes
Regn. No 62256

**ENDOCRINE & SPECIALITY CLINIC**

New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,
R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.
(Next to Krishnamachari Yogamandiram)
Tel: 2495 0090Mob: 94458 80090
E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com
www.chennaiendocrine.com

1. சிவனது கேசத்தில் இருந்து.
2. மஹா காளி.
3. க்ஷேத்ரபாலன்.
4. வீரபத்ரன் மூன்று பாணங்களால்.
5. ப்ருகுவை தனது காலின் கீழ் அழுத்தி தாடியை பிடித்து இழுத்தான் - மணிபத்ரன்; பூஷணின் பற்களை பிடுங்கினான் சண்டன்; பகனின் மூன்று கண்களை தோண்டி எடுத்தான் - நந்தி.
6. தக்ஷனுடைய மார்பை பிளந்து அக்னி குண்டத்தில் எறிந்தான்.
7. அக்னி புராணம் - அத் 53; பவிஷ்ய புராணம் - அத் 85; ப்ரும்ம புராணம் - அத் 34/36/205/206; தேவீ பாகவத புராணம் அத் 517; ஹரிவம்ச புராணம் - அத் 188; கூர்ம புராணம் 9.50.51; லிங்க புராணம் - அத் 3; மார்கண்டேய புராணம் - அத் 49; மத்ஸ்ய புராணம் - அத் 153.19; நாரதீய புராணம் - 1.3.2; வாமன புராணம்; வராஹ புராணம் - 211.39; சிவ புராணம்.
8. வைத்தீஸ்வரன் கோவில் - மாயவரம் அருகில்.
9. சாயங்காலம் அக்னியில் செய்யப்படும் ஆஹுதி - சம்பத்கரி; காலையில் சூரியனுக்கு செய்யும் ஆஹுதி - ஆயுஷ்கரி.
10. கோடி ப்ராம்மணனுக்கு உணவு அளித்த புண்யம்.



**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Ltd**

# வீடு தேடி வருவான் விட்டலன் – 19

தொலைக்காட்சியில் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களை கொள்ளை கொண்ட ஶ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளின் தொகுப்பு

**ஶ்ரீஞானேஸ்வரர்-8**

சாஸ்திரத்தை மீறியதாலே, அந்தக் காலத்தில் விட்டோபந்த்தை ஊரிலிருந்து ஒதுக்கி வைத்து விட்டார்கள். நான்கு குழந்தைகள் வேறு பிறந்து விட்டனர். கஷ்டமான வாழ்க்கை. குழந்தைகளிடம் கூட ஒருவரும் பழக மாட்டார்கள்.

யார் அந்த குழந்தைகளை பார்த்தாலும், முகம் சுளிப்பர். "சன்யாசி பெற்ற பிள்ளையான நீ கிட்டே நெருங்காதே; விலகிப் போ" என்று திட்டுவார்கள். குழந்தைகளை கொஞ்சுவார் இல்லை என்பதோடு மட்டுமல்லாமல், பரிகசித்து வந்தனர் அனைவரும். விட்டோபந்த்தின் நிலையும் மிகவும் கஷ்டமாக இருந்தது. குருவின் சொல்லிற்காக இவர் சன்யாசத்தை விட்டார் என்று யாரும் பேசமாட்டார்கள். இவனுக்கு ஆசை அதிகம். அதனால்தான், மறுபடி கல்யாணம் செய்தான். பிள்ளை குட்டிகளை பெற்றான். ஆசை இவனுக்கு இருந்தது எனில், எதற்காக இவன் சன்யாசம் மேற்கொள்ள வேண்டும். வேஷம் போடுகிறான், என்று விட்டோபந்த் காதுபடவே பேசுவார்கள். ஆதரவாக பேசுவோர் யாரும் இல்லை. எப்படியோ காலம் ஓடி, குழந்தைகள் கொஞ்சம் பெரியவர்கள் ஆனார்கள். உபநயனம் போட வேண்டுமே என்று விட்டோபந்த்தும் ருக்மிணியும் கவலைப்பட்டனர்.

சன்யாசி பெற்ற பிள்ளை என்று எல்லோரும் ஒதுக்கி வைத்தனர். உபநயனம் போட்டு விட யாரும் முன் வரவில்லை. ருக்மிணிக்கு கவலை ஜாஸ்தியானபொழுது எங்கேயாவது க்ஷேத்ரம் சென்று விரதம் இருக்கலாமா என்று விட்டோபந்த்திடம் கேட்டாள். ஒரு க்ஷேத்திரத்திற்கு சென்று அங்கேயே தங்கி விரதமிருந்து, பூஜை பிரார்த்தனை செய்து, அங்குள்ள தீர்த்தத்தில் நீராடி வருவர். இப்படி விரதம் செய்வதை ஒரு மண்டலம் 48 நாட்களுக்கு செய்யும் வழக்கம் குருவாயூர் போன்ற க்ஷேத்ரங்களில் இன்றும் உள்ளது. இதற்கு பஜனம் என்று பெயர். எது விஷயமாக விரதம் இருக்கிறோமோ, அது விஷயமாக பகவான் ஏதாவது ஒரு

வகையிலோ, கனவிலோ உத்தரவு தருவான் என்பது வழக்கம். அப்படி ருக்மிணியும் திரியம்பக க்ஷேத்ரத்திற்கு சென்று விரதம் இருக்கலாமா என்று விட்டோபந்த்தை கேட்டாள். ஜோதிர்லிங்க க்ஷேத்ரமான அங்கு அஞ்சலி பர்வதம் என்ற பர்வதமும், அருகில் ப்ரும்மகிரி என்கிற மலையும், குஷாவர்த்தம் என்கிற தீர்த்தமும் உண்டு. திருவண்ணாமலையை தமிழ்நாட்டில் வலம் வருவது போல், இந்த திரியம்பகத்தில் உள்ள ப்ரும்மகிரியை வலம் வருவதும் விசேஷம். திரயம்பகேஸ்வரரை விரதமிருந்து பூஜித்து வணங்கி பிரார்த்தனை செய்தால், தங்களுடைய கஷ்டத்திற்கு விடிவுகாலம் பிறக்கும் என்று ருக்மிணி நம்பினாள். விட்டோபந்திற்கும் அது சரியென பட்டது. தாய், தந்தை, குழந்தைகள் என அனைவரும் த்ரியம்பக க்ஷேத்ரத்திற்கு நடந்தே வந்து சேர்ந்தனர். அங்குள்ள ப்ரும்மகிரியை வலம் வருவர். குஷாவர்த்தத்தில் நீராடுவர். பரமேஸ்வரனிடம் ருக்மிணி, "ருத்ராக்ஷ மாலைகள் அணிந்திருக்கும் கைலாஸபதே! எங்கள் கல்யாணம் முதலில் சாக்ஷாத் பாண்டுரங்கன் செய்து வைத்தது என்று உனக்கு தெரியும். பஸ்மோத்தூளித விக்ரஹமாய் விளங்கும் பரமேஸ்வரா! உனக்கு தெரியாதா என்ன? குருவின் வாக்கிற்கு கட்டுப்பட்டுதானே இவர் சன்யாசம் மேற்கொண்ட பின்னும் குடும்பத்திற்கு வந்தார். சந்திரமௌலி! உனது அருளாலன்றோ மணி மணியாய் இந்த நான்கு குழந்தைகள் பிறந்தன. இப்பொழுது எங்களையும் இந்த குழந்தைகளையும் உலகம் ஒதுக்கி வைத்து விட்டால், என்ன செய்வது? இதற்கு ஒரு விமோசனமே கிடையாதா? விரைவில் அருளும் நீதான் இதற்கு ஒரு வழி தந்து, எங்கள் கஷ்டங்கள் தீருமாறு, அருள வேண்டும்" என்று தினமும் பிரார்த்தனை செய்வாள்.

குழந்தைகளுக்கு உபநயனம் போட வேண்டுமே? அவர்கள் வேத சாஸ்திரங்களை கற்க ஒரு ஏற்பாடும் செய்ய முடியவில்லையே, என்று கண்ணீருடன் வருத்தப்பட்டு வந்தனர் பெற்றோர்கள். திரியம்பகம் இன்று பார்த்தால் கூட காட்டுப் பிரதேசமாக இருக்கிறது. அன்றைய காலகட்டத்தில் எப்படி இருந்திருக்கும் என்று சொல்ல தேவையே இல்லை. ஒருநாள் மலையை வலம் வந்து கொண்டிருக்கையில், ஒரு பயங்கரமான புலி ஒன்று துரத்திக் கொண்டு வந்தது!

(தொடரும்)

# ஸனாதன கோஸ்வாமி

6

- ஜனனி

பிக்ஷைக்குப் பிறகு, தபன மிஸ்ரர் வலுக்கட்டாயமாக ஸனாதனருக்கு புது வஸ்திரம் அளிக்க வேண்டும் என்று பிடிவாதம் செய்தார். ஸனாதனர் மறுத்து, வேண்டுமானால் நீங்கள் அணிந்த ஒரு பழைய வஸ்திரத்தை தாருங்கள் என்று கேட்டுக் கொண்டார். தபன மிஸ்ரரும் இதற்கு இணங்க வேண்டியதாயிற்று. அந்த பழைய வேஷ்டியை, ஸனாதனர் இரண்டாக கிழித்து, ஒரு துண்டும் கௌபீனமுமாக செய்து கொண்டார். அந்த ஒரு துண்டை தன் உடம்பில் சுற்றிக் கொண்டார். இப்பொழுது அவர் பூர்ணமாக ஒரு வைஷ்ணவராகிவிட்டார். இதன் பின் காசியில், அவர் மதுகரி வ்ருத்தியில் இருந்து கொண்டு, ப்ரபுவின் பாத நிழலிலேயே வசிக்க தொடங்கினார். இவரது வைராக்கியத்தைக் கண்டு, மஹாப்ரபு மனதிற்குள்ளேயே ஸந்தோஷித்தார். ஸனாதனரிடம் ஸ்ரீகாந்த் என்ற உறவினர் அளித்த, அந்த வெள்ளை நிற கம்பளி மட்டும் இன்னும் இருந்தது. அது, மிகவும் ம்ருதுவான விலையுயர்ந்த கம்பளம். மஹாப்ரபு அடிக்கடி அந்த சால்வையையே பார்த்துக் கொண்டிருந்தார். ப்ரபுவிற்கு தான் இதை வைத்திருப்பது பிடிக்கவில்லை என்று புரிந்து கொண்ட ஸனாதனர், நேராக கங்கை கரைக்குச் சென்றார். அங்கு ஒரு ஏழை ஸாது, தனது கிழிந்த வேட்டியை கரையில் காயப்போட்டிருந்தார். பிடிவாதமாக அவரிடமிருந்து அந்த கிழிந்த வஸ்திரத்தைப் பெற்று, அவருக்கு அந்த உயர்ந்த சால்வையை கொடுத்துவிட்டு திரும்பினார் ஸனாதனர்.

அந்த கிழிந்த வஸ்திரத்தை அணிந்து சந்த்ரசேகரர் வீட்டிற்கு வந்தார். நடந்ததையெல்லாம் அறிந்தும், மஹாப்ரபு அவரிடம், ”ஸனாதன்! உன்னுடைய அந்த கம்பளி எங்கேயப்பா? எங்கே வைத்து விட்டாய்?” என்று கேட்டார். ஸனாதனர் வெட்கித்துக் கொண்டே, ”ப்ரபோ! தங்களது

எல்லையில்லா கருணையெனும் ப்ரவாஹம் எனது பாவங்களுடன் சேர்ந்து, அந்த விஷயரூபமான கம்பளியையும் அடித்துச் சென்றுவிட்டது" என்று கூறி அவர் சரணங்களில் விழுந்தார்.

ப்ரபு அவரிடம், "ஸனாதன்! நல்ல வைத்யன் ரோகிக்கு வ்யாதி சரியான பின்பும், சில நாட்கள் வரை மாத்திரைகள் கொடுக்கிறான். ஏனென்றால், வ்யாதியின் லவலேசம் உடம்பிலிருந்தால் கூட, அது மீண்டும் வ்யாதியிலேயே கொண்டு சேர்க்கும். நல்ல வைத்தியன் வ்யாதியின் லவலேசம் கூட உடம்பிலில்லாமல் தீர்ப்பான். நீயும் எல்லாவற்றையும் துறந்தாய். ஆனால் அந்த உயர்ந்த சால்வையை வைத்துக் கொண்டேயிருந்தாய். பிக்ஷை எடுத்து சாப்பிடுவதும், பின் கம்பளி போர்த்திக் கொள்வதும், இது உனக்கு அழகல்ல" என்று கூறினார். ப்ரபு தன்னை இப்படி திருத்தியாட்கொள்வதை நினைத்து நினைத்து, ஸனாதனர் நா தழுதழுக்க, ப்ரபுவின் பாதங்களை பற்றிக் கொண்டு அழத் தொடங்கினார். எல்லாரும் ஸனாதனரின் அத்புதமான வைராக்கியத்தையும், ப்ரபுவின் பக்த வாத்ஸல்யத்தையும் கண்டு நெகிழ்ந்தனர்.

இதன்பின் இரண்டு மாதங்கள் ப்ரபுவுடனேயே தங்கி, ஸனாதனர் பல சாஸ்திர விஷயங்களையும் பக்தி சூக்ஷ்மங்களையும் அவரிடமிருந்து நேராக கற்றார். இதன்பின் பூரி செல்லவிருந்த ப்ரபுவிடம், தான் என்ன செய்ய வேண்டுமென்று ஸனாதனர் கை குவித்து கேட்டார்.

ப்ரபு, "நீயும் உனது சகோதரனின் வழியே செல். ப்ருந்தாவனம் சென்று, நீங்கள் இருவருமாக சேர்ந்து வ்ரஜ மண்டலத்தில் லுப்தமான (மறைந்து போன) லீலா ஸ்தலங்களையும் தீர்த்தங்களையும் மீண்டும் உத்தாரணம் செய்யுங்கள். பகவானின் ப்ரகடனமாகாத லீலைகளை பக்தி க்ரந்தங்கள் மூலம் ப்ரகாசமடையச் செய்யுங்கள். பின்னால் வ்ரஜத்திற்கு வரப்போகும், கௌடீய பக்தர்களை கவனித்துக் கொள்ளும் பொறுப்பையும் உங்களிடமே ஒப்படைக்கிறேன்" என்று கூறினார்.

"ப்ரபு! அதமர்களான நாங்கள் இத்தனை பெரிய


காரியத்தை செய்ய தகுதியுடையவர்களாக எப்படி ஆக முடியும்? ஆனால் உண்மையில் நாங்கள் யந்திரங்களே! எங்களை ஆட்டுவிக்கும் யந்த்ரீ தாங்கள். எங்களுடைய முயற்சி என்பது இதில் எவ்விதத்திலும் பயன் அளிக்காது என்று அறிவோம்" என்றார் ஸனாதனர்.

"நீ இந்த காரியத்தில் ப்ரவ்ருத்தி செய். பகவான் ஸ்ரீஹரி தானாகவே உன் இதயத்தில், ஒரு சக்தியை அளிப்பார். உன் ஹ்ருதயத்தில் தானாகவே க்ருஷ்ண லீலைகளின் ஸ்புரணம் ஏற்படும்'' என்று பல ஆசிகளை கூறி, அவரை ப்ருந்தாவனம் செல்வதற்கு தயார் செய்தார். மறுநாள் காலை கங்கா ஸ்நானத்திற்குப் பின், ப்ரபு நீலாசலத்திற்கு கிளம்பினார். ப்ரபுவின் பிரிவை ஸனாதனரால் தாங்க முடியவேயில்லை. எப்படியோ மனதை ஸமாதானம் செய்து கொண்டு, அவரும் ராஜமார்க்கத்தில் ப்ருந்தாவனத்தை நோக்கிச் சென்றார்.

ரூபர், ஸுபுத்திராய்ஜி என்பவருடன் ஒரு மாத காலம் வ்ரஜத்தின் பல வனங்களில் ஸஞ்சாரம் செய்தார். பிறகு அவருக்கு ஸனாதனரைப் பற்றிய கவலை ஏற்பட்டது. உடனே ரூபர் அனூப்புடன் சேர்ந்து, கங்கை கரை ஓரமாகவே காசிக்கு புறப்பட்டார். ஸனாதனர் சாலை வழியாகவே ப்ருந்தாவனம் சென்றதால் இருவரும் சந்தித்துக் கொள்ளவில்லை. ஸனாதனர் மதுராவில் தனது இரு சகோதரர்களையும் தேடியபொழுது, யத்ருச்சையாக ஸுபுத்திராய்ஜியை சந்தித்தார். அவரிடமிருந்து தனது ஸகோதரர்கள் தன்னைத் தேடி காசி சென்றிருப்பதை அறிந்தார். அதனால் அவர் வ்ரஜத்தையடைந்து அங்குள்ள லீலாஸ்தலங்களை வெளிப்படுத்துவதில் ஈடுபடலானார். இங்கு அவர் பரம வைராக்கியத்துடன் த்யாகமயமான ஜீவனம் நடத்தி வந்தார். ஒரு பக்தரிடமிருந்து, மதுராமாஹாத்மியம் என்ற புஸ்தகத்தை பெற்றார். அதன் அடிப்படையில், வ்ரஜ மண்டலத்தில் முழுவதுமாக ஸஞ்சரித்து, அலைந்தலைந்து தீர்த்தங்களை கண்டுப்பிடிப்பதில், தீவிர முயற்சி எடுத்தார் ஸனாதனர். வீடுகளில் பிக்ஷை பெறுவதும், இரவுகளில் ஏதாவதொரு மரத்தடியில் வசிப்பார். இப்படியாக, தனது நாட்களை ப்ருந்தாவனத்தில் கழித்தார் ஸனாதனர்.

(தொடரும்)

# பாலகர்களுக்கு ஒரு கதை



## உதவிக் கொள்ளுங்கள்!

எதிர்பாராத விதமாக பிரயாணி ஒருவன் பாலைவனத்தில் மாட்டி கொண்டான். தாகத்தால், தன்னிடம் இருந்த தண்ணீரை குடித்துக்கொண்டே வந்தான். போகப்போக அவனிடம் இருந்த குடுவையில் இருந்த தண்ணீர், சுத்தமாக தீர்ந்து விட்டது. அவன் போக வேண்டிய தூரமோ, இன்னும் அதிகம் இருந்தது. ஆனால், அவனுக்கு தாகமோ அடங்கியபாடில்லை. தண்ணீர் இல்லை என்பதால், அவன் மயங்கி விழும் நிலைக்கு வந்து விட்டான். கால்கள் தள்ளாடின. இந்தப் பாலைவனத்திலேயே, தாகத்தால் உயிரை விட்டு விடுவோமோ என்று நினைத்தான் அவன். என்ன செய்வது என்று தடுமாறினான். அப்போது, தூரத்தில் ஒரு குடிசை போல ஏதோ ஒன்று தெரிந்தது. கால்களை நகர்த்தவே மிகவும் கஷ்டமாக இருந்தாலும், எப்படியோ கஷ்டப்பட்டு, அவன் அந்த இடத்திற்கு சென்று விட்டான்.

அங்கே ஆட்கள் யாரும் இல்லை. அவன் நெஞ்சம் படபட என அடித்து கொண்டது. தண்ணீர் கிடைக்காதா என ஏங்கியது. ஆச்சரியம்! அங்கே ஒரு தண்ணீர் அடி பம்ப் இருந்தது. அவன் கண்களை அவனால் நம்பவே முடியவில்லை. இருப்பினும், அது நிலத்தடி நீரை எடுக்கவே பயன்பட்டிருக்க வேண்டும். அதனால், அவன் மிகுந்த கஷ்டமுடன், இருந்த கொஞ்சநஞ்ச பலத்துடன் அந்த பம்பை இயக்க ஆரம்பித்தான். பலம் கொண்ட மட்டும் முயற்சித்தான். ஆனால் நீர் வரவில்லை. இப்பொழுது, அவன் தன் உற்சாகத்தை இழக்க ஆரம்பித்தான். அப்போது, அந்த குடிசையின் மூலையில் எதேச்சையாக பார்த்த பொழுது, ஒரு சிறு குடுவையில் நீர் நிரப்பி இருந்தது தெரிந்தது. ஆவலுடன் அதை எடுத்து குடிக்க ஓடினான். குடுவையின் மேல் ஏதோ எழுதி இருந்தது.

அதில், "இதில் உள்ள தண்ணீரை அந்த பம்ப் செட்டில் ஊற்றி அடித்தால் தண்ணீர் வரும். குடித்து விட்டு மறுபடியும் இதை தண்ணீரால் நிரப்பி வைத்து விட்டுச் செல்லவும்" என்று எழுதி இருந்தது. அந்தப் பம்ப் செட்டோ மிகவும் பழையது. அதை இதுவரை நன்றாக இயக்கியும் நீர் வரவில்லை. குடுவையில் இருக்கும் இந்த தண்ணீரை ஊற்றினால், அது இயங்குமா, தண்ணீர் வருமா என்பது சந்தேகம். அது இயங்கா விட்டால் இந்த தண்ணீரும் வீணாகி விடும். அதற்குப் பதிலாக இந்தத் தண்ணீரைக் குடித்து விட்டால், தாகமும் தணியும்; உயிர் பிழைப்பதற்கு உத்திரவாதமும் உள்ளது. இப்படி அந்தப் பயணி யோசித்தான்.

தண்ணீரைக் குடித்து விடுவதே புத்திசாலித்தனம் என்று அறிவு கூறியது. ஒரு வேளை அதில் எழுதி வைத்திருப்பது போல், அந்தப் பம்ப் இயங்குவதாக இருந்து, அது இயங்கத் தேவையான அந்தத் தண்ணீரைக் குடித்து விட்டால், அது மகாபாதகம் என்று இதயம் சொன்னது. இனி தன்னைப் போலத் தாகத்தோடு வருபவர்களுக்கு, அது பயன்படாமல் போவதற்கு, தானே காரணமாகி விடுவோம் என்று மனசாட்சி எச்சரித்தது.

அதற்கு மேலும் அவன் யோசிக்கவில்லை. ஆனது ஆகட்டும் என்று அந்தப் பம்பில் அந்தத் தண்ணீரை ஊற்றி விட்டு, அதை அடித்து இயக்க ஆரம்பித்தான். மறைந்திருக்கும் இறைவனின் அருள் வெளிவருவது போல, தண்ணீர் இப்பொழுது வேகமாக வர ஆரம்பித்தது. தாகம் தீர வேண்டிய அளவு தண்ணீர் குடித்து விட்டு, அந்த குடுவையில் நீரை நிரப்பி விட்டு, தனக்கும் தேவையான அளவு நீரை நிரப்பி எடுத்து கொண்டு அந்த பயணி செல்லலானான்.

அந்தப் பயணிக்கு கடைசியில் ஒரு ஆத்மதிருப்தி எனும் மனநிறைவு இருந்தது. அதுதான் மிகப்பெரிய பரிசு. விருது. இப்படிப்பட்ட செயல்களை அதிகம் செய்யச் செய்ய மனிதன் தானும் உயர்ந்து, தன்னைச் சார்ந்த சமுதாயத்தையும் உயர்த்துகிறான்.

இந்த நிகழ்ச்சியில் சில படிப்பினைகள் உள்ளன. ஒன்று நாம் அவசியமான காலத்தில் அனுபவிப்பதை, அடுத்தவருக்கும் அதே போல பயன்படும்படி விட்டுப் போக வேண்டும். எந்த நன்மையும் நம்முடன் நின்று விடலாகாது. நமக்கு தேவையானதை செய்து கொள்வோம்; அடுத்தவர் பற்றி கவலை இல்லை எனும் மனப்பான்மை தவறு.

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற மனநிலையில் ஒவ்வொருவரும் இருந்தால், இந்த உலகம் இன்பமயமாகி விடுமல்லவா? இதுவன்றோ சொர்க்கமாகி விடும் அப்பொழுது!

மேலும், நாம் வாழ்க்கையில் கொடுத்தால்தான் பெற முடியும். இது பிரபஞ்ச விதி. இன்னும் சொல்லப் போனால் கொடுத்ததை மட்டுமே பெற முடியும். ஆனால் அதைக் கொடுத்த அளவைக் காட்டிலும், பன்மடங்காகப் பெறுகிறோம். மேலே சொன்ன பயணி, ஊற்றிய தண்ணீரை விடப் பலமடங்கு தண்ணீரைப் பெற்று அனுபவித்து, முதலில் இருந்த அளவு நீரை எடுத்தும் வைக்கிறான். அவனைப் போல் நமக்கும் கொடுத்து விட்டால் இருந்ததையும் இழந்து விடுவோமே என்று சந்தேகம் தோன்றலாம். ஆனால் அந்த சந்தேகம் உண்மையை அடிப்படையாகக் கொண்டதல்ல. அந்த சந்தேகத்தோடு தர மறுக்கையில் நமக்கு வருவதையும் அடைத்து வைக்கிறோம்.

எனவே எது உங்களுக்கு அதிகம் வேண்டுமோ அதை நீங்கள் முதலில் தேவைப்படும் மற்றவர்களுக்குக் கொடுத்துப் பாருங்கள். செல்வத்தை மட்டுமல்ல அன்பையும், மகிழ்ச்சியையும் கூட அடுத்தவர்க்குக் கொடுங்கள். கண்டிப்பாக, அது பலமடங்கு பெருகித் திரும்பவும், உங்களை வந்து சேரக் காண்பீர்கள். பிறருக்கு என கொடுப்பது எல்லாம், தனக்காகவே கொடுத்து கொள்வதாக ஆகிறது.

அந்த பயணி மேலும் தண்ணீர் எடுத்து செல்லும் முன், அந்த அட்டையில் இருந்த வரிகளுடன் மற்றொரு வரியை எழுதினான். அது பின்வருமாறு இருந்தது. 'அய்யா! நம்புங்கள். இதில் எழுதி இருப்பது உண்மை'.

**ஜுலை 29 - 31 -** குருபூர்ணிமா வைபவம் பெங்களூரு ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவில் வளாகத்தில் மிக சிறப்பாக நடைபெற்றது. வேதவியாச புராண பாடசாலை வித்யார்த்திகள், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்பாக, பாராயணம் செய்தனர். புராண பாடசாலை அத்யாபகர் ப்ரும்மஸ்ரீ கார்த்திகேய சர்மாவை ஸ்ரீஸ்வாமிஜி அனுக்ரஹித்தார்கள். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் மூன்று நாட்கள் ப்ரவசனம் செய்தார்கள்.

**ஆகஸ்டு 15 - G.O.D.** இந்தியா டிரஸ்ட் மற்றும் தூத்துக்குடி சக்தி ஸ்ரீனிவாசன் அறக்கட்டளை சார்பாக, மஹாரண்யம் கிராம அரசு பள்ளி மற்றும் வெள்ளரை கிராம அரசு பள்ளிகளில், பொது தேர்வில் மிக சிறப்பாக தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு சீருடைகளும், பரிசுகளும் வழங்கின. சிறப்பாக பணியாற்றிய ஆசிரியர்களுக்கு விருதுகளும் வழங்கப்பட்டது. மஹாரண்யம் அரசு பள்ளியில் கம்ப்யூட்டரும் பிரிண்டரும் வழங்கப்பட்டது.

**ஆகஸ்டு 1, 2** - ஆகஸ்டு 1 அன்று, **G.O.D.** இந்தியா டிரஸ்ட் சார்பாக புராநவா வினா விடை போட்டி, சின்மயா ஹெரிடேஜ் சென்டரில் நடைபெற்றது. **88** பள்ளி மாணாக்கர் குழுக்கள் பங்கேற்றனர். ராமானுஜம்ஜி அழகாக நடத்திய புதிர் போட்டியில், ராஜாஜி வித்யாஸ்ரம் பள்ளி முதலிடத்தையும், தேவி அகாடெமி இரண்டாம் இடத்தையும் பிடித்தது. ஆகஸ்டு 2 அன்று **G.O.D.** இந்தியா, *சம்ஸ்கிருதி - பாரம்பரியங்களை போற்றும் கலை விழாவை* மூன்றாம் வருடமாக, ராமகிருஷ்ணா மிஷன் பள்ளியில் நடத்தியது. **Ancient wisdom from Puranas contributing to Modern Science** குறித்த பேச்சு போட்டியில் மாணாக்கர்கள் மிக மிக சிறப்பாக பேசினர். கடும் போட்டிக்கு பிறகு, தேர்வு செய்யப்பட்டு சிறப்பான பரிசு வழங்கப்பட்டது. **WONDROUS WHISPERS OF ANCIENT INDIA** என்ற தலைப்பில் ஓவியம், கார்ட்டூன் வரைதல், டீ ஷர்ட் பெயிண்டிங், **Design a Doodle** ஆகிய போட்டிகளில், **600**க்கும் மேற்பட்ட மாணவமணிகள் கலந்து கொண்டு, சிறப்பாக தங்களது திறமையை வெளிப்படுத்தினர்.

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- ஜனனி

## ஸ்ரீஸூபலதாஸ் பாபாஜி-3

பின்னர் ஸ்ரீஸூபலதாஸ் பாபா பவ்ஸா எனும் க்ராமத்திற்குச் சென்று அங்கு தங்கினார். ப்ளேக்கின் வீர்யம் குறைந்த பின்னர், 6 மாத காலத்திற்குப் பிறகு, மீண்டும் ராதாகுண்டம் திரும்பினார் பாபா. இப்பொழுது அவரது பஜனை மிகவும் தீவிரமடைந்தது. மதுகரிக்கு செல்வது கூட குறையும் அளவிற்கு பஜனை செய்தார் பாபா. இதனால் பல நாட்கள் மதுகரி இல்லாமல், அன்ன ஆகாரம் இல்லாமல் பாபா கழித்தார்.

இதைக் கண்ட பவ்ஸா க்ராமத்தைச் சேர்ந்த ராதிகாதாஸ் பாபா என்பவர், ஸூபலதாஸ் பாபாவின் பொருட்டு மதுகரி யாசித்து, அதில் கிடைக்கும் ரொட்டிகளை காயவைத்து, 15-20 நாட்களுக்கு ஒரு முறை பாபாவிற்கு கொடுத்துவிட்டு வரலானார். இந்த காய்ந்த ரொட்டிகளை வெகு நாட்கள் பாபா சாப்பிட்டு வந்தார். இதன் காரணமாக, அவர் முதுகெலும்பு வளைந்துவிட்டது. உடல் ஒரு பக்கமாக சாய்ந்து விட்டது. மருத்துவர்கள், காய்ந்த ரொட்டியை சாப்பிட்டதுதான் இதற்கு காரணம் என்றார்கள்.

பாபாவிற்கு சிஷ்யர்கள் யாரும் இல்லை, இருந்திருந்தால், அவர்கள் தினம் பாபாவிற்கு அன்று சமைத்த மதுகரியை எடுத்து வந்து தரலாம். ஆனால் அவரோ யாரையும் சிஷ்யராக ஏற்க மறுப்பார். பலர் 3-4 வருடங்கள் வரை, தங்களை சிஷ்யர்களாக ஏற்கும்படி ப்ரார்த்தித்து, பாபாவையே சுற்றிச் சுற்றி வந்தனர். ஆனால் பாபாவோ சிஷ்யர்களை ஏற்றுக்கொண்டால், தனது ஏகாந்த பஜனத்திற்கு விக்னம் வந்துவிடும் என்றெண்ணி, ஒருவரையும் சிஷ்யராக ஏற்கவில்லை.

பாபாவின் நிலைமையை அறிந்த ஸ்ரீப்ராண க்ருஷ்ணதாஸ் பாபா, அவரை கூப்பிட்டு, சில சிஷ்யர்களுக்கு ஸந்யாஸம் அளிக்கும்படி ஆக்ஞாபித்தார். ஸ்ரீஷ்யாம ஸூந்தரதாஸ், ஸ்ரீராதாரமணதாஸ், ஸ்ரீகௌர ஸூந்தரதாஸ், ஸ்ரீராமக்ருஷ்ணதாஸ் மற்றும் ஸ்ரீஜயநிதாயிதாஸ் இவரது

சிஷ்யர்களானார்கள். ஸ்ரீஜயநிதாயிதாஸ் பாபாவின் குடிலருகிலேயே மற்றொரு குடிலமைத்து, அதில் தங்கிக்கொண்டு, பாபாவிற்கு ஸேவை செய்யலானார். இவரே பாபாவிற்கு மதுகரியும் பெற்றுத் தரலானார்.

ஆனால் பாபாவிற்கு மற்றவர்களை சார்ந்திருப்பது பிடிக்கவில்லை. தன் சிஷ்யர்களிடமிருந்து கூட அவர் முடிந்த அளவில் குறைவாகவே ஸேவையை ஏற்பார். இதனால், சில நாட்களுக்குப் பின் அவர் தனது ஆகாரத்தை தானே சமைத்துக் கொள்ளலானார். அவருடைய ஓரிரு பக்தர்கள் மாதம் ஒரு முறை, அவருக்கு தேவையான மளிகையை கொண்டு சேர்த்துவிடுவார்கள். அவர் ஸாயங்காலம் ஒரு முறை சாதம் வடித்துக் கொள்வார். அந்த குடிலின் அருகிலேயே இருந்த கிணற்றிலிருந்து, பாபா தானே நீர் இரைத்துக் கொள்வார்.

எப்பொழுதாவது ஏதாவது விசேஷமான தேவையிருந்தால் மட்டும், பாபா ஜயநிதாயிதாஸிற்கு குரல் கொடுப்பார். அவரது குடிலின் பின்புறம் ஒருவர் அமர்ந்தவாறே உள்ளே செல்லும் அளவிற்கு, ஒரு சிறிய வாயில் இருந்தது. பாபா குரல் கொடுத்தால், ஜயநிதாயிதாஸ்பாபா அங்கு சென்று அமர்வார். பாபா கதவை திறந்து, அவரிடம் கூறவேண்டியதை கூறுவார். ஜயநிதாயிக்கும் கூட பொதுவாக குடிலில் நுழைவது தடை செய்யப்பட்டிருந்தது.

பாபா எப்பொழுதும் மௌனமாகவேயிருப்பார். யாருக்கும் தரிசனம் தரமாட்டார், என்பதே ப்ரஸித்தி. பொதுவாக இது உண்மையாக இருந்தாலும், அவர் முற்றிலும் யாரையுமே பார்த்துப் பேசிப் பழகமாட்டார் என்பதில்லை. உயர்ந்த மஹாத்மாவோ பக்தரோ வந்தால், அவரிடம் தன் இதயத்தைவிட்டு மனமார பேசுவார் பாபா. நவத்வீபை சேர்ந்த ஸ்ரீகானுப்ரிய கோஸ்வாமி, கோவர்த்தனத்தைச் சேர்ந்த ஸ்ரீஅத்வைததாஸ் பாபாஜி மற்றும் ப்ருந்தாவனத்தைச் சேர்ந்த ஸ்ரீபாலக்ருஷ்ணதாஸ் பாபாஜி போன்ற மஹான்களுடன், பல மணி நேரங்கள் பகவத் லீலை, கதை, பஜனை, ஹாஸ்யம் என்று செலவிடுவார் பாபா.

பாபா பல வருடங்கள் தொடர்ந்து, அந்த குடிலிலேயே ஏகாந்தமாக இருந்து கொண்டு பஜனை செய்தார். (தொடரும்)

# மாலே மணிவண்ணா - 142



—மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

*வண்டு பொரேரர் என எழ*
*வண்டு பொரேரர் என எழும்*
*கடிப்புகு வேரிக் கதவமில் தோட்டிக்*
*கடிப்பிகு காதில் கனங்குழை தொடர*
*மிளிர்மின வாய்ந்த விளங்கொளி நுதலார்*

வண்டுகள் கூட்டமாக மேல் எழ அதனால் மகளிர் அணிந்திருக்கும் வளையல்கள் பொரேரர் என்று ஒலிக்கும் - வெண்சிறுகடுகாற் காவலை உடைய அழகுடைய கதவுகள் இல்லாமல், நல்ல காவலை உடையதாக உள்ள நகர் என காட்டி, அந்நகரில் தோடணிவதற்காக வளர்க்கப்பட்ட காதில் பொன்னாலாகிய குழை தொடர விளங்குகின்ற மின்னலை போன்ற சிறப்பாக அமைந்த விளங்கிய ஒளி படைத்த நெற்றியை உடைய மகளிர் நெருங்கி வழிபாட்டுக்கு செல்கின்றனர் என்றார்.

இரண்டு விதமான நிறம் அமைத்த படத்தினை அணிந்த மலையொத்த செல்வனாகிய ஆதிசேடனது திருக்கோயில் உள்ளது.

அத்திருக்கோயிலுக்கு வழிபாட்டுக்கு செல்வாரை காட்டுகிறார்.

*ஊர்களிற்ரன்ன செம்மலோரும்*
*வாயிருள் பனிச்சை வரிசிலைப் புருவத்து*
*ஒளிபிழை ஒதுங்கிய ஒண்ணுதலோரும்*

ஏறிச் செலுத்தும் யானையை ஒத்த தலைமை உடைய ஆடவர்களும், வாய்ந்த இருள் போல கட்டிய பனிச்சை என்னும் தலைக்கோலம் உடையவராகிய வில்லொத்த புருவம் உடையவர்களாய ஒளி படைத்த அணிகலன்களோடு, ஒருபால் ஒதுங்கி செல்லும் அசை நடையுடைய அழகிய நெற்றி படைத்த மகளிரும் திருக்கோயில் வழிபாட்டுக்கு செல்கின்றனர்.

*புலத்தோ டளவிய புகழ் அணிந்தோரும்*
*நலத்தோ டளவிய நாண் அணிந்தோரும்*

தாம் வாழும் நிலத்தோடு சார்த்தி கலந்து பேசப்படுகின்ற புகழ் உடையவராய் ஆடவர்களும் (புலம் என்பது நிலம் அளவிய - கலந்த) பெண்மைக்குரிய நலங்களோடு கலந்து சிறக்கின்ற நாணையே அணியும் ஆபரணமாக உடையவராய மகளிரும் (உயிரினும் சிறந்தன்று நாணே - என்பர் தொல்காப்பியர்) இணைந்து செல்கின்றனர்.

*விடையோடு இகலிய விறல் நடையோரும்*
*நடைமடம் மேவிய நாண் அணிந்தோரும்*

நல்ல எருதினோடு போட்டி போடக்கூடிய வெற்றி பெற்ற நடையினை உடைய ஆண்களும், நடக்கத் தெரியாமல் தடுமாறி நடக்கின்ற நடைமடம் (அறியாமை உடைய நடை) பொருந்திய நாணத்தை கொண்ட பெண்களும் வழிபட செல்கின்றனர்.

(தொடரும்)

**love is eternal.....we build homes with love**

rk

radha krishna real estates

**rajmani group of companies**

(property developers, builders and contractors)

we invite joint venture /outright proposals from owners

Contact 9840030711, email: rkre46@gmail.com

Website: http://www.rajmanibuilders.com

**Spend Rs. 7/-* a day and protect your entire family with Swastham Health Card!!!**




**Subscribe to Swastham Health Card for a period of 1 year and avail discounts ranging from 5 – 40 % at our affiliated healthcare providers.**

## FEATURES

- Swastham Health Card is not an insurance plan
- No age limit to use this card
- No restriction on pre-existing illnesses
- Caters to medical and non – medical expenses
- Unlimited benefits from a single card for the whole family
- No additional processing time for use
- Quality services from all providers at your convenience

**To know more details call 9092 800 900, Monday to Sunday, 9 am to 9 pm**

**Visit us at www.swasthamhealthservices.com**

Swastham Health Services Pvt Ltd

II Floor, 29 A, ARK Colony, Eldams Road, Alwarpet, Chennai – 600 018

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 180. For Details: **+91-44-24895875**

- **D.D /M.O/Cheque in name of Guruji Sri Muralidhara Swamigal Mission** ஏற்றுக்கொள்ளப்படும்.
- சந்தா அனுப்ப முகவரி: **Guruji Sri Muralidhara Swamigal Mission, No. 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.**
- மூன்று வருடம் வரை மட்டுமே சந்தா பெற்றுக்கொள்ளப்படுகிறது.
- கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.
- ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- மதுரமுரளி விவரங்களுக்கு helpdesk@madhuramurali.org என்ற மின்னஞ்சலை தொடர்பு கொள்ளவும்.


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| ஏகாதசி | செப்டம்பர் 9, 24 அக்டோபர் 8, 24<br>September 9, 24 October 8, 24 |
| செப் 5 - 14 | மதுரபுரி ஆஸ்ரமத்தில் கோகுலாஷ்டமி உற்சவம் |
| செப் 27 | கோவிந்தபுரம் சைதன்யகுடீரம் பிரதிஷ்டா தினம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

**To know about Satsang schedule, events & also to register your prayers, please call +91-9382393833**